2018 ஜூலை 3] **[பேரவைத் தலைவர்]**

உட்காருங்கள். விதி 110-ன்கீழ் அறிக்கைகளை மாண்புமிகு முதல்வர் அளிக்க இருக்கின்றார். பிறகு பேசலாம். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) விதி 110-ன்கீழ் அறிக்கைகள் வர இருக்கின்றன. உட்காருங்கள். பிறகு பேசலாம். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் பேச இருக்கிறார். உட்காருங்கள். (குறுக்கீடு) வாய்ப்பைப் பற்றி பிறகு பார்க்கலாம். இப்போது உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்வதற்கு உறுதுணையாக இருக்கும் வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும், மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வந்துள்ளது. அதன் அடிப்படையில், வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் 10 சார்—பதிவாளர் அலுவலகங்கள் நவீன வசதிகளுடன்கூடிய அலுவலகங்களாக 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும் என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

(ஆ) ஹஜ் பயணத்திற்கு மானியம், பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மற்றும் கல்லூரி மாணவியர் விடுதிகளுக்கு கண்காணிப்பு கேமிராக்கள் பொருத்துதல், விடுதிகளுக்கு பராமரிப்புப் பணிகள் மற்றும் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளைத் தரமுயர்த்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை சார்பில் பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்:*

1. மத்திய அரசு ஆண்டுதோறும் ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளும் இஸ்லாமிய சமூகத்தினருக்கு மானியம் அளித்து வந்தது. இந்த மானியத்தை 2018 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசு நிறுத்தியுள்ளது. இந்துக்களுக்கு மானசரோவர் மற்றும் முக்திநாத் செல்ல வழங்கப்படும் மானியத்தைப் போலவும், சிறுபான்மையின

மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு, கிறிஸ்தவர்களுக்கு ஜெருசலேம் செல்ல வழங்கப்படும் மானியத்தைப் போலவும், இஸ்லாமிய பெருமக்கள் ஹஜ் புனிதப் பயணத்தை மேற்கொள்வதற்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசு, இந்த ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் 6 கோடி ரூபாய் மானியம் வழங்கும். இத்திட்டத்தின்கீழ் 3,728 நபர்கள் இந்த ஆண்டு, 2018-2019 ஆம் ஆண்டு ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்வார்கள் என்பதை இம்மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 11-20

2. மாநிலம் முழுவதும் செயல்பட்டுவரும் 502 பள்ளி மற்றும் கல்லூரி மாணவியர் விடுதிகளில் 31,940 மாணவியர் தங்கிப் பயின்று வருகின்றனர். இவர்களின் பாதுகாப்பினைக் கருத்திற்கொண்டு, இவ்விடுதிகளின் நான்கு பகுதிகளிலும், விடுதி ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் செலவில் 502 விடுதிகளுக்கும் 5 கோடியே 2 இலட்சம் ரூபாய் செலவில் CCTV Camera பொருத்தப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

3. தமிழ்நாடு முழுவதும் மொத்தமுள்ள 1,343 விடுதிகளில் 1,265 விடுதிகள் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. இவ்வாறு சொந்தக் கட்டடத்தில் இயங்கிவரும் 1,265 விடுதிகளில், சுமார் 595 விடுதிகளுக்கு பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. அதன் அடிப்படையில், நடப்பாண்டில் 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, இவ்விடுதிகளில் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

4. மதுரை மாவட்டத்தில் மதிப்பனூர் மற்றும் மேலத் திருமாணிக்கம், தேனி மாவட்டத்தில் மு. பெருமாள்பட்டி மற்றும் பாலார்பட்டியிலுள்ள 4 அரசு கள்ளர் தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும்; மதுரை மாவட்டத்தில் கொ. புளியங்குளம், அ. புதுப்பட்டி மற்றும் வி. பெருமாள்பட்டி ஆகிய 3 அரசு கள்ளர் நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும்; தேனி மாவட்டம், அன்னஞ்சி, திண்டுக்கல் மாவட்டம், தெப்பத்துப்பட்டி மற்றும் மதுரை மாவட்டம், கோவிலாங்குளம்

2018 ஜூலை 3] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

ஆகிய 3 அரசு கள்ளர் உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் (மேசையைத் தட்டும் ஒலி) என மொத்தம் 10 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் 3 கோடியே 8 இலட்சத்து 33 ஆயிரம் ரூபாய் செலவில் நிலை உயர்த்தப்படும் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு உபகரண பெட்டகம் வழங்குதல், கோவை, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலகங்களுக்கு கட்டடங்கள், கிருஷ்ணகிரி மற்றும் தூத்துக்குடி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு கட்டடங்கள், விழுப்புரம் மற்றும் சேலம் மாவட்டங்களில் மண்டல பயிற்சி இணை இயக்குநர் அலுவலகங்கள் அமைத்தல் மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளுக்கு மருத்துவக் கருவிகள் வழங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை சார்பில் நடப்பாண்டில் செயல்படுத்தப்பட இருக்கும் புதிய அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் வெளியிடுகின்றேன்.*

1. கட்டடம் மற்றும் இதர கட்டுமானப் பணியிடங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பினை உறுதிசெய்யும் வகையில் முதற்கட்டமாக, 25,000 கட்டுமானத் தொழிலாளர்களுக்கு தலா 2,000/- ரூபாய் மதிப்புள்ள பாதுகாப்பு உபகரணங்கள் கொண்ட பெட்டகம் 5 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இப்பெட்டகத்தில் பாதுகாப்பு காலணிகள், பாதுகாப்பு தலைக்கவசம், பளிச்சிடும் மேலங்கி, கையுறைகள் மற்றும் பாதுகாப்பு கண்ணாடிகள் இருக்கும்.

2. கோவையில் வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலகங்களுக்கு 4 கோடியே 3 இலட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. தமிழ்நாட்டில் தற்போதுள்ள 32 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில், 29 அலுவலகங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. நடப்பாண்டில், கிருஷ்ணகிரி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களிலுள்ள மாவட்ட வேலைவாய்ப்பு